எனது பெயர் மதுசூதனன். நான் கடந்த 10 ஆண்டுகளாக உடல் பருமனாக காணப்பட்டேன். எனது 15வது வயதில் நான் சுமார் 100 கிலோ இருந்தேன். எனது 17வது வயதில் 150 கிலோ இருந்தேன். எனது 22வது வயதில் நான் 210 கிலோ இருந்தேன். இந்த காலங்களில் நான் பல இன்னல்களுக்கு ஆளானேன். என்னால் ஒரு சுபநிகழ்ச்சி, கோயில் போன்ற எந்த ஒரு பொது இடத்திற்கும் போகமுடியாமல் அவதிப்பட்டேன். பலபேர் கேலி செய்தனர். கிண்டல் செய்தனர். இதனால் நான் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டேன். எனக்குள் தாழ்வுமனபான்மை ஏற்பட்டது. சிறுவர்கள் என்னை கண்டால் மற்ற சிறுவர்களை அழைத்து காண்பித்து சந்தோஷப்படுவார்கள். பெரியவர்களுக்கும் என்னை காண்டால் சிரிப்பு வந்துவிடும். இப்படி பல அவமானங்களை சந்தித்தேன். நான் +1 Hostel லில் தங்கிப் படித்தேன். அங்கிருந்த சக மாணவர்களின் கிண்டல் கேலி பேச்சால் என்னால் அங்கு இருக்க முடியவில்லை. பாதியில் வந்துவிட்டேன். என்னால் வாழமுடியாது என்று எண்ணினேன். எனது தாழ்வு மனப்பான்மை என்னை தற்கொலை செய்து கொள்ளலாமா என்று எண்ண தூண்டும் அளவிற்கு நான் இருந்தேன். எனது உடல் பருமனால் +2 கூட பாஸ் ஆக முடியவில்லை. மேலும் எனது படிப்பை என்னால் தொடர முடியவில்லை. எனது தந்தை எனக்காக சுமார் 10 இடத்திற்கு மேல் அழைத்து சென்று சிகிச்சை அளித்தார். இயற்கை வைத்தியமும் எனக்கு கைவிரித்துவிட்டது. யோகா போன்ற உடற்பயிற்சிகளும் செய்து பார்த்தேன். பலன் இல்லை. நான் இறுதியாக சென்னையில் உள்ள பிரபல மருத்துமனையில் 2004 வருடம் April மாதம் சிகிச்சைகாக சேர்க்கப்பட்டேன். சுமார் 1 மாதகாலம் சிகிச்சை பெற்றேன். பலன் இல்லை. இப்படி எனக்காக பணம் தான் விரயமானதே தவிர பலன் எதுவும் இல்லை. இப்போதுதான் GEM Hospital லை பற்றி தினகரன் நாளிதழில் பார்த்தேன். ஒருத்தருக்கு Obesity operation செய்ததாக போட்டிருந்தது. பின்னர் எனது தந்தை GEM Hopsital வந்து மதிப்பிற்குரிய டாக்டர். ஐயா பழனிவேல்–யிடம் கலந்து பேசி என்னை 2004ம் ஆண்டு மே மாதம் அங்கிருந்து Discharge செய்து GEM Hospital கொண்டு வந்தார்கள். இங்கு எனக்காக பிரத்யேக கட்டில் செய்து எனக்காகவே தனி கவனம் செலுத்தி Operation செய்தார்கள். 15 நாள் தங்கியிருந்தேன். Operation செய்த நாளிலிருந்தே எனது உடல் இளைக்க ஆரம்பித்ததை என்னால் உணர முடிந்தது. நான் தற்போது 82 கிலோ இருக்கிறேன். எனது உடல் எடையில் 128 கிலோ குறைந்துள்ளது (210–82=128). என்னால் 2 ஆண்டுகளுக்கு முன்புவரை கனவில் கூட நினைத்து பார்க்காத ஒரு வாழ்க்கை கிடைத்தது. நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். என்னால் சாதரணமாக தற்போது மற்றவர்களை போல் ஆனந்தமாக அனைத்து பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள முடிகிறது. எனக்கெல்லாம் திருமணம் நடக்குமா? மற்றவர்களை போல் என்னால் வாழமுடியுமா? என்று எண்ணி இருந்த எனக்கு திருமணம் நடக்கும், என்னாலும் சராசரி வாழ்க்கை வாழமுடியும் என்று நினைக்கும் போதே 100 ஆண்டுகள் வாழ்ந்த ஆனந்தம் கிடைக்கிறது. என்னை பொருத்த வரை GEM Hopsital எனக்கு ஒரு கோயில். டாக்டர். பழனிவேல் அய்யா அவர்கள் எனக்கு ஒரு கடவுள்.

மறுபிறவி கிடைத்தது. மகிழ்ச்சியுடன் வாழ்கிறேன்.

என்றும் நன்றியுடன்,
**பா. மதுசூதனன்**